SANGANATHAM
சங்கநாதம்

ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்
SENIOR TAMILS' CENTRE OF ONTARIO

June 2026
40-3

## தலைவரின் செய்தி

அன்பிற்கினிய மன்ற உறுப்பினர்களே,

2026 ஆம் ஆண்டு நமது ஒன்றாரியோ முது தமிழர் மன்றத்தின் வரலாற்றில் மறக்க முடியாத ஒரு ஆண்டாக அமைந்துள்ளது. நாற்பது ஆண்டுகால சேவையை பெருமையுடன் கொண்டாடிய இந்த ஆண்டில், நமது அன்புத் தலைவர் திரு. மனுவேல் ஜேசுதாசன் அவர்களின் திடீர் மறைவு எமது அனைவரின் இதயங்களிலும் ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியிருந்தது. அவரது அர்ப்பணிப்பு, தொலைநோக்குப் பார்வை, கலை மற்றும் சமூகப் பணிகளுக்கான பற்றுதல் ஆகியவை எமது மன்றத்தின் வளர்ச்சியில் அழியாத தடத்தை பதித்துள்ளன. அவர் எம்மிடமிருந்து உடலால் பிரிந்திருந்தாலும், அவர் விதைத்த சேவை உணர்வும் அவர் கனவுகண்ட மன்றத்தின் எதிர்காலமும் தொடர்ந்து எமக்கு வழிகாட்டிக்கொண்டே இருக்கும்.

இத்தகைய சவாலான காலகட்டத்தில், துணைத் தலைவராக இருந்த என்னை தலைவரின் பொறுப்பை ஏற்குமாறு நிர்வாக சபை கேட்டபோது, அது எனக்கு ஒரு பெரும் பொறுப்பாகவும், அதே நேரத்தில் எனது கடமையாகவும் தோன்றியது. தலைவர் ஜேசுதாசன் அவர்களின் பணியை முழுமையாகத் தொடர்வது எளிதான காரியமல்ல என்பதை நான் நன்கு அறிவேன். இருப்பினும், நிர்வாக சபை உறுப்பினர்கள், மன்ற உத்தியோகத்தர்கள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்கள் அனைவரின் ஒத்துழைப்புடனும் ஆதரவுடனும் இந்தப் பொறுப்பை என்னால் முடிந்தவரை மேற்கொண்டு வருகின்றேன்.

நமது மன்றம் ஒருவரது முயற்சியில் உருவாக்கப்பட்டதல்ல; பல தலைமுறைகளாக அர்ப்பணிப்புடன் உழைத்த உறுப்பினர்கள், முன்னாள் தலைவர்கள், மன்ற உத்தியோகத்தர்கள், தன்னார்வத் தொண்டர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியின் விளைவாக இன்று ஒரு வலிமையான சமூக அமைப்பாகத் திகழ்கிறது. அந்த பாரம்பரியத்தைப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

இந்த ஆண்டில் நடைபெற்ற நாற்பதாவது ஆண்டு விழா நிகழ்வுகள், கலாச்சார நிகழ்ச்சிகள், போட்டிகள், சமூக நலன்திட்டங்கள் மற்றும் உறுப்பினர்களின் உற்சாகமான பங்கேற்பு ஆகியவை நமது மன்றத்தின் உயிர்ப்பையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தின. குறிப்பாக "சோழனின் கனவு" போன்ற கலை நிகழ்ச்சிகள் எமது தமிழ்ப் பண்பாட்டின் பெருமையையும், தலைமுறைகளை இணைக்கும் சக்தியையும் உலகிற்கு எடுத்துக் காட்டின.

ஜூலை 2026 வரை தலைவரின் பொறுப்பை வகிக்கும் வாய்ப்பை எனக்கு வழங்கிய நிர்வாக சபைக்கும், இந்தப் பயணத்தில் என்னுடன் இணைந்து செயற்பட்டு வரும் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் பின்னர் நான் மீண்டும் துணைத் தலைவராக என் பணியைத் தொடருவேன். ஆனால் எந்தப் பொறுப்பில் இருந்தாலும், மன்றத்தின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் சேவை செய்வதே என் நோக்கமாக இருக்கும்.

நமது 40 ஆண்டுகால பயணம் ஒரு முடிவல்ல; அது ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கம். எமது முன்னோர்கள் உருவாக்கிய வலுவான அடித்தளத்தின் மீது, இளைய தலைமுறையினருடன் கைகோர்த்து, நமது மொழி, கலாசாரம் மற்றும் சமூகப் பணிகளை மேலும் வளர்த்தெடுப்போம். "தமிழர் கலைகள், பண்பாடு, பாரம்பரியத்தில் வேரூன்றி, தமிழ் மூத்தோருக்கு சேவையாற்றும் நோக்கத்துடன் வளர்வோம்" என்ற எமது மன்றத்தின் 40வது ஆண்டு விழா செய்தியை மனதில் கொண்டு, ஒற்றுமையுடனும் நம்பிக்கையுடனும் எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்போம்.

வாழ்க ஒன்றாரியோ முது தமிழர் மன்றம்.

அன்புடன்
தவமலர் அருளானந்தம்

## 40th ANNUAL GENERAL MEETING/ நாற்பதாவது வருடாந்த பொது கூட்டம் 2026

ஒன்றாரியோ முது தமிழர் மன்றத்தின் நாற்பதாவது வருடாந்த பொது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு உங்களை மன்றத்தின் இயக்குனர் சபையின் சார்பில் அன்புடன் அழைக்கின்றேன் . மேற்படி பொது கூட்டம் ஜூலை மாதம் 31 திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பாபா பங்குவட் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. On behalf of the Board of Directors I cordially invite you to attend the 40th Annual General Meeting of the Senior Tamils' Centre of Ontario on Friday the 31st of July 2026 at Baba Banquet Hall- 3300 McNicoll Ave, Scarborough, ON M1V 5J6 at 10am.

**மதியபோசனம்: $20**

மதிய போசன பதிவுகளுக்கு ஜூலை 27ம் திகதிக்கு முன்னர் மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## 2026-2027க்கான நிர்வாகசபை இயக்குனர் பதவிகட்கான தேர்தல் விபரங்கள்
## ELECTIONS FOR BOARD OF DIRECTORS, 2026/2027

ஜூலை மாதம் நடக்கவிருக்கின்ற தேர்தலுக்கு பின்வரும் 5 பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தலைவர் (இரண்டு வருடங்கள்), பொருளாளர் (இரண்டு வருடங்கள்) 2 இயக்குனர்கள் (இரண்டு வருடங்கள்), பத்திராதிபர் (இரண்டு வருடங்கள்)

**விண்ணப்பங்கள் போட்டியாளரால் முறையாகக் கையொப்பமிடப்பட்டு, பிரேரிப்பவர், ஆமோதிப்பவரது பெயர்களுடன் ஜூலை மாதம் 22ம் திகதி மதியம் 12 மணிக்கு முன் மன்ற அலுவலகத்திற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.**

2026-2027ம் ஆண்டுக்கான இயக்குனர் பதவிகட்கான விண்ணப்ப படிவங்களை பெற விரும்புவோர் மன்ற அலுவலகத்தை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

Nominations are being called for the following 5 positions for the election to be held in July 2026
President (2years), Treasurer (2years), 2 Directors (2years), Editor (2 years)

Nomination forms could be obtained from the STC **office. Nominations duly signed by the nominee along with the names of proposer and seconder should be sent to reach the STC office on or before 12 noon, 22nd July 2026.**

Time passes so quickly. Embark on that long-awaited road trip, take in the breathtaking beauty of nature, and cherish your loved ones with all your heart. Be sure to express your love or apologize before it's too late. Spread kindness, show forgiveness, and create precious memories that will last a lifetime. Even on the most challenging days, there is always something good to be found. Remember, the present moment is all we have, so embrace it fully and live without regrets. Tomorrow is never a guarantee, so start living your best life today!

## இதழ் ஆசிரியரிடமிருந்து!

உழைக்கத் தெரிந்த நமக்கு ஓய்வெடுக்கத் தெரியவில்லை.
சுமக்க தெரிந்த நமக்கு சுமைகளை இறக்கி வைக்க தெரியவில்லை.
உனக்காகவும் கொஞ்சம் வாழ், இந்த உலகம் உனக்காகவும்தான்.

என்னுள் குடிகொண்டிருக்கும் எனது ஆழ்மன சக்தியை வணங்கி எனது இறுதி இதழை தொடங்குகிறேன். எனது சகோதர்ர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த இனிய வணக்கங்கள்.

எமது நாற்பதாவது ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த நாற்பது ஆண்டுகளில் ஓர் ஆலமரம் வளர்ந்து கிளை பரப்பி ,வேர் ஊன்றி நிற்பது போல எமது மன்றத்தின் அபாரமான வளர்ச்சியை உள் வாங்கி அனுபவிக்கக் கூடியதாக இருந்தது. அதன் வளர்ச்சியில் நாமும் பங்கு பற்றி அதை அனுபவித்து பயன்பெறுகிறோம் என்பதில் எமக்கும் ஓர் ஆழமான பங்கு உண்டு. எமது மன்றத்தின் வளர்ச்சி என்பது அதில் உள்ள முதியவர்கள் எப்படி இளமை துடிப்புடன் ஓடியாடி ஆரோக்கியமாக ,மகிழ்ச்சியாக வாழ்வதை கண்கூடாக பார்க்கக் கூடியதாக இருந்தது. சோழனின் கனவு அன்றைய நிகழ்வை ஓர் உச்சக் கட்டத்திற்கு கொண்டு சென்றது. அதில் வந்த பாடல்கள், நடனம், அதன் வடிவமைத்த விதம் எல்லாமே மிக அற்புதமாக அமைந்தது. அதை அற்புதமாக வடிவமைத்து வழங்கிய அனைவருக்கும் வாழ்த்துக்கள். இப்படி ஓர் நிகழ்வை நடத்தி முடிப்பது என்பது மிகப் பெரிய சாதனை.

இம்முறை Alaska trip மிக அருமை . அதில் Alaska glacier ( பனிப்பாறை) வாழ்வில் பார்க்கக் கிடைக்காத ஓர் அற்புதமான மனதைத் தொட்ட ஓர் இயற்கையின் அற்புத வடிவமைப்பு. பனிப் பாறை என்பது பல ஆண்டுகளாக பெய்த பனி ஒன்று சேர்ந்து ,மிகப் பெரிய மற்றும் தடிமனான பனிக்கட்டியாக உருவாகி ,மெதுவாக நகரும் இயற்கை அமைப்பாகும். இது பெரும்பாலும் உயரமான மலைப் பகுதிகளிலும் ,வட மற்றும் தென் துருவப் பகுதிகளிலும் காணப்படுகிறது. இக் கோடை காலத்திலும் பல சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன. அவற்றில் பங்கு பற்றி உங்கள் நேரத்தை மிக மகிழ்ச்சியாக செலவிடுங்கள்.
நம் நிம்மதியை வெளியில் உள்ள மனிதர்களிடமோ அல்லது சூழ்நிலைகளிலோ தேடுவது ,கானல் நீரை கண்டு ஏமாறுவது போன்றது. உண்மையான அமைதி என்பது வெளியில் இருந்து நமக்கு கிடைப்பது அல்ல. அது ஏற்கனவே நமக்குள்ளே உறைந்திருக்கும் ஒரு மௌனப் பெருவெளி கடலின் மேற்பரப்பில் அலைகள் ஆர்பரித்தாலும் ,அதன் ஆழம் எப்போதும் அமைதியாகவே இருக்கும். அது போல உங்கள் வெளி வாழ்வில் சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும் ,உங்கள் அகத்தின் ஆழத்தில் ஒரு மௌனப் பெருவெளி எப்போதும் காத்துக் கொண்டு கொண்டிருக்கிறது. இன்று சில நிமிடங்கள் உள்நோக்கிப் பயணித்து அந்த அமைதியைத் தொட்டு வாருங்கள். சில நிமிடங்கள் கண்களை மூடி , உங்கள் மூச்சைக் கவனித்து, அந்த உள் நோக்கிய அமைதியில் திளையுங்கள். அகம் நோக்குவோம், அமைதி பெறுவோம்,உணர்வே பிரம்மம்.

உங்களுடன் இரண்டு வருடங்களாக கைகோர்த்து பயணித்த எனது பயணம் இவ் இதழுடன் நிறைவுக்கு வருகிறது. எனது ஆக்கங்களைப் படித்து ஆர்வத்துடன் எனக்கு ஊக்கம் அளித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். தான் இருக்கும் இடத்தில் மகிழ்சியாக இருக்க முடியாதவர்கள் ,எங்கு சென்றாலும் மகிழ்சியாக இருப்பதில்லை. தன்னிடம் இருப்பதைக் கொண்டு மகிழ்ச்சி அடையாதவர்கள் எது கிடைத்த போதும் மகிழ்சியாக வாழ்வதில்லை.

ரதிமதி சபாநாதன்

அப்பாவை பெயர் சொல்லிக்கூப்பிடும் மகள்கள் ஒருவித அழகு.

மகளை தன் அம்மாவாக பார்க்கின்ற அப்பாக்கள் அதைவிட அழகு.

அப்பாவுக்கு மேக்கப் போட்டு ரசிக்கும் மகள்கள் ஒருவித அழகு.

மகளுக்கு தன் கையால் உணவூட்டி மகிழும் அப்பாக்கள் அதைவிட அழகு.

அப்பாவின் கழுத்தில் தொங்கி விளையாடும் மகள்கள் ஒருவித அழகு.

மகளின் கால்களில் கொஞ்சி விளையாடும் அப்பாக்கள் அதைவிட அழகு.

அப்பா சொல்லும் அத்தனை உண்மைகளையும் ஆர்வமாய் கேட்கின்ற மகள்கள் ஒருவித அழகு.

மகள் சொல்லும் அத்தனை பொய்களையும் சிரிக்காமல் ரசிக்கின்ற அப்பாக்கள் அதைவிட அழகு.

அப்பாவை ஹீரோவாக பார்க்கும் மகள்கள்

அப்பாவுக்குத் தன் சோகங்களை சொல்லி ஆறுதல்தேடும் மகள்கள் ஒருவித அழகு.

மகளின் முகத்தைப் பார்த்துத் தன் சோகங்களை மறந்துவிடும் அப்பாக்கள் அதைவிட அழகு.

அப்பாவுக்கு மகளாக அடுத்த ஜென்மத்திலும் பிறக்க விரும்பும் மகள்கள் ஒருவித அழகு.


மகளுக்கே பிள்ளையாக அடுத்த ஜென்மத்தில் பிறக்க விரும்பும் அப்பாக்கள் அதைவிட அழகு.

வயதான பின்னரும் தன் மகளை குழந்தையாகவே நினைக்கும் அப்பாக்கள் அதைவிட அழகு.

கடவுள் தந்த வரம் என் அப்பா என நினைக்கும் மகள்கள் ஒருவித அழகு.

அந்தக் கடவுளே என் மகள்தான் என நினைக்கும் அப்பாக்கள் அதைவிட அழகு.




## STC 40th Anniversary Gala Celebration – A Resounding Success

The Senior Tamils' Centre of Ontario proudly celebrated its 40th Anniversary Gala on May 31, 2026, at the Metropolitan Centre, Scarborough, marking a significant milestone in the organization's history.

The event was a tremendous success, with over 550 attendies, including members, sponsors, dignitaries, well wishers and community leaders gathering to celebrate four decades of dedicated service to Tamil seniors in Ontario.

The evening featured a blend of formal ceremonies and outstanding cultural performances that highlighted STC's mission, the importance of intergenerational connection, and the richness of Tamil heritage, culture, and arts. One of the highlights of the evening was the dance drama "சோழனின் கனவு (Cholanin Kanavu)", which captivated the audience and received widespread praise.

The gala also provided an opportunity to honour STC's founders, Past Presidents, Board members, staff, volunteers, sponsors, and long-serving members whose contributions have helped shape the organization over the past 40 years. The release of the STC 40th Anniversary Souvenir Magazine, special recognition, and messages from dignitaries added further significance to the celebration.

We were honoured to welcome several distinguished dignitaries and elected representatives who joined us in celebrating this important milestone. Their presence added great significance to the occasion and demonstrated their continued support for seniors and our community. Among the dignitaries in attendance were: Her Worship Olivia Chow, Mayor of the City of Toronto, The Honourable Gary Anandasangaree, Minister of Public Safety, The Honourable Jean Yip, Member of Parliament for Scarborough—Agincourt, Mr. Aris Babikian, Member of Provincial Parliament for Scarborough—Agincourt, Ms. Juanita Nathan, Member of Parliament for Pickering—Brooklin, The Honourable Raymond Cho, Minister for Seniors and Accessibility and Mr. Neethan Shan, Toronto City Councillor, Ward 25 Scarborough—Rouge Park. We sincerely thank them for taking the time to join our celebrations and for their kind words, encouragement, and ongoing support of the Senior Tamils' Centre of Ontario and the seniors we serve.

A special highlight of the evening was the presentation of the Lifetime Service Awards to Mr. S. Srijeyanathan and Mr. M.V. Jeganathan in recognition of their decades of dedicated service, leadership, and unwavering commitment to the Senior Tamils' Centre of Ontario. Their tireless contributions have played a significant role in the growth and success of STC, and the awards served as a fitting tribute to their outstanding legacy of volunteerism and community service.

The success of the event was made possible through the dedication of the STC 40 Committee, Board of Directors, staff, volunteers, sponsors, donors, performers, and the unwavering support of our members and community.

As STC celebrates this important milestone, we look back with pride on 40 years of service and look forward with confidence to continuing our mission of enhancing the lives of Tamil seniors for generations to come.

**Rooted in Heritage -- Growing with Purpose**






## ஒன்றாரியோ முதுதமிழர் மன்றத்தின் 40வது ஆண்டு விழா - மாபெரும் வெற்றி விழா

ஒன்றாரியோ முதுதமிழர் மன்றம் தனது 40வது ஆண்டு நிறைவு விழாவை 2026 மே மாதம் 31ஆம் திகதி ஸ்கார்பரோவில் உள்ள மெட்ரோபாலிட்டன் மண்டபத்தில் மிகுந்த கோலாகலத்துடன் கொண்டாடியது. மன்றத்தின் வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்த இந்த விழா பெரும் வெற்றியைப் பெற்றதில் சந்தேகமெதுவுமில்லை. இந்த நிகழ்வில் 550-க்கும் மேற்பட்டவர்கள், மன்ற உறுப்பினர்கள், அனுசரணையாளர்கள், முக்கிய பிரமுகர்கள், நலன் விரும்பிகள் மற்றும் சமூகத் தலைவர்கள் கலந்து கொண்டு, ஒன்றாரியோ முதுதமிழர் மன்றம் தமிழ் மூத்தோருக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய நாற்பது ஆண்டுகால சேவையை கொண்டாடி மகிழ்ந்தனர்.

மாலை நிகழ்ச்சிகள் முறையான விழா நிகழ்வுகளுடனும், சிறப்பான கலைநிகழ்ச்சிகளுடனும் சிறப்புற்றன. அவை மன்றத்தின் நோக்கங்களையும், தலைமுறைகளுக்கிடையேயான உறவின் முக்கியத்துவத்தையும், தமிழ் பாரம்பரியம், பண்பாடு மற்றும் கலைகளின் செழுமையையும் எடுத்துக்காட்டின. நிகழ்ச்சியின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக "சோழனின் கனவு" என்ற நாட்டிய நாடகம் அமைந்தது. இந்த நாட்டிய நாடகம் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்து அனைவரது பாராட்டைப் பெற்றது.

இந்த விழா, மன்றத்தின் முன்னாள் தலைவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், மன்ற உத்தியோகத்தர்கள், தன்னார்வத் தொண்டர்கள், அனுசரணையாளர்கள் மற்றும் கடந்த நாற்பது ஆண்டுகளாக மன்றத்தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பங்களித்த நீண்டகால உறுப்பினர்களை கௌரவிக்கும் வாய்ப்பாகவும் அமைந்தது. STC 40வது ஆண்டு நினைவு மலர் வெளியீடு, சிறப்பு கௌரவிப்புகள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் வாழ்த்துச் செய்திகள் விழாவிற்கு மேலும் பெருமை சேர்த்தன. நிகழ்ச்சியின் சிறப்பம்சங்களில் ஒன்றாக, ஒன்றாரியோ முதுதமிழர் மன்றத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பல தசாப்தங்களாக அர்ப்பணிப்புடன் சேவை செய்த திரு. சே. சிறிஜெயநாதன் மற்றும் திரு. மா. வ. ஜெகநாதன் ஆகியோருக்கு வாழ்நாள் சேவை விருது வழங்கப்பட்டது. அவர்களின் அயராத உழைப்பு, தலைமைத்துவம் மற்றும் மன்றத்தின் மீது கொண்டிருந்த உறுதியான அர்ப்பணிப்பு, STC-யின் வளர்ச்சியிலும் வெற்றியிலும் முக்கிய பங்காற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த விருது, அவர்களின் சிறப்பான தொண்டுப் பணிக்கும் சமூக சேவைக்கும் வழங்கப்பட்ட பொருத்தமான அங்கீகாரமாக அமைந்தது.

இந்த நிகழ்வின் வெற்றிக்கு STC 40வது ஆண்டு விழாக்குழு, நிர்வாக சபை, மன்ற உத்தியோகத்தர்கள், தன்னார்வத் தொண்டர்கள், அனுசரணையாளர்கள், நன்கொடையாளர்கள், கலைஞர்கள் மற்றும் உறுப்பினர்களின் உறுதியான ஆதரவு பெரும் காரணமாக அமைந்தது என்றே சொல்லலாம்.

இந்த முக்கிய மைல்கல்லை கொண்டாடும் வேளையில், மன்றம் கடந்த நாற்பது ஆண்டுகால சேவையை பெருமையுடன் நினைவுகூருவதோடு, எதிர்கால தலைமுறைக்கும் தமிழ் மூத்தோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் தனது பணியை தொடரும் என்று உறுதியாக நம்புவோம்.








**Presentation of Donation to Scarborough Health Network Foundation**

As part of the STC 40th Anniversary milestone celebration and in recognition of the invaluable healthcare services provided to our community, the Senior Tamils' Centre of Ontario proudly presented a donation of **$5,000** to the **Scarborough Health Network Foundation**. Ms. Krishni Narine, Associate Director of Community Development received the donation on behalf of the Foundation. This contribution reflects STC's commitment to giving back to the wider community and supporting organizations that make a meaningful difference in the lives of residents across Scarborough.



**Proud Sponsors: Jesudasan Family (Event Sponsor), S. Sritharan & Dr. Baheeratharan Thurairajah (Platinum Sponsors), Dr. Suganthy Bream (Diamond Sponsor)**








Forty years is not just a milestone
It is a story of service
A story of belonging
A story of countless lives touched




CHOLANIN KANAVU







## Welcome New Members

| | |
|---|---|
| 4152 | Dr. Baheerathan Thurairajah |
| 4153 | Rahini Baheerathan |
| 4154 | Pushpa Vijeyaratnam |
| 4155 | Charles Rubasingham |
| 4156 | Rajee Sabaratnam |
| 4157 | Chandradevi Velauthapillai |
| 4158 | Sakuntala Ragunathan |
| 4159 | Coomarasamy Kirupananthan |
| 4160 | Chandrakala Kirupananthan |
| 4161 | Chitrakala Chandrakumar |
| 4162 | Thuraisingam Chandrakumar |
| 4163 | Puthumaladavi Thillainathan |
| 4164 | Anusuya Mahendrarajah |
| 4165 | Malathy Narentheraraja |
| 4166 | Suchitra Sivagnanam |
| 4167 | Manoranjitham Gukathasan |
| 4168 | Navaratnam Thirumal |
| 4169 | Palaniyar Nadesalingam |
| 4170 | Kandiah Vijayakanthan |
| 4171 | Vijayalaxmi Vijayakanthan |
| 4172 | Nanthakumar Kumaravellupillai |
| 4173 | Meenalogini Navaratnarajah |
| 4174 | Nagalingam Pathmanathan |
| 4175 | Santhra Pathmanathan |

கடந்ததை விட்டுவிடுங்கள்! நேற்றைய தவறுகளை நினைத்து வருந்திக் கொண்டே இருந்தால், இன்றைய வாய்ப்புகளை இழந்து விடுவோம்.






## Important Messages/ முக்கிய அறிவித்தல்கள்

2026ம் ஆண்டுக்கான வருடாந்த சந்தா பணம் குறித்து நினைவூட்ட வேண்டிய தருணமிது. இந்த வருடத்திற்கான சந்தா பணத்தை காசோலையாகவோ, பணமாகவோ, வங்கி பரிமாற்றம் மூலமோ (etransfer) நீங்கள் செலுத்தி பற்றுசீட்டினை பெற்று கொள்ளலாம். மேலும் சங்கநாதம் காலாண்டு செய்தியறிக்கையினை தபாலில் பெற்று கொள்ள விரும்பினால் பத்து டொலர்களை செலுத்துவதன் மூலம் பெற்று கொள்ள முடியும். அங்கத்துவ பணத்திற்கான பற்று சீட்டு மின்னஞ்சல் மூலம் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்

E transfer link: seniortamils@gmail.com

**Single membership $35**

**STC Credit Card Payment Facility Now Available**

We are pleased to inform you that the Senior Tamils' Centre of Ontario (STC) now accepts **credit card payments** for membership fees, tours, events, and other approved STC programs and services. This additional payment option has been introduced for the convenience of our members. Payments may continue to be made by cash, cheque, e-transfer, or credit card. **Please Note:** A **3% service charge** will be added to all payments made by credit card. This charge is applied to help offset the credit card processing fees charged to STC.

**Important Notice Regarding Credit Card Benefits and Insurance**

While STC accepts credit card payments, STC is **not a registered travel agency or tour operator**. Therefore, STC cannot guarantee or make any representation regarding travel insurance, trip cancellation, trip interruption, medical coverage, reward points, or any other benefits that may be offered by your credit card provider. Members who wish to rely on any credit card-related insurance coverage or benefits are encouraged to **contact their credit card issuer directly** to confirm eligibility and coverage details before making payment.

STC shall not be responsible for any decisions made by credit card companies regarding insurance claims, coverage, rewards, or other cardholder benefits.


If you have any questions regarding payment options, please contact the STC office.

**ஒன்றாரியோ முதுதமிழர் மன்றத்தின் கிரெடிட் கார்டு மூலம் பணம் செலுத்தும் வசதி!**

ஒன்றாரியோ முதுதமிழர் மன்றம் தாம் வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட சேவைகளுக்காக கிரெடிட் கார்டு மூலம் பணம் செலுத்தும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். உறுப்பினர்களின் வசதிக்காக இந்த புதிய கட்டண வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் வழமைபோல் பணம் (Cash), காசோலை (Cheque), மின்னணு பணமாற்றம் (e-Transfer) ஆகியவற்றின் மூலமும் கட்டணங்களைச் செலுத்தலாம். கிரெடிட் கார்டு மூலம் செலுத்தப்படும் அனைத்து கட்டணங்களுக்கும் **3% சேவைக் கட்டணம் (Service Charge)** சேர்க்கப்படும். இந்தக் கட்டணம், கிரெடிட் கார்டு பரிவர்த்தனைச் செலவுகளை ஈடுசெய்யும் நோக்கத்துடன் வசூலிக்கப்படுகிறது.

**கிரெடிட் கார்டு சலுகைகள் மற்றும் காப்புறுதி தொடர்பான முக்கிய அறிவிப்பு**

STC கிரெடிட் கார்டு கட்டணங்களை ஏற்றுக்கொண்டாலும், STC ஒரு பதிவு செய்யப்பட்ட பயண முகவர் நிறுவனம் (Travel Agency) அல்லது சுற்றுலா சேவை வழங்குநர் (Tour Operator) அல்ல என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். எனவே, உங்கள் கிரெடிட் கார்டு நிறுவனம் வழங்கக்கூடிய பயணக் காப்புறுதி (Travel Insurance), பயண இரத்துச் சலுகை (Trip Cancellation), பயண இடைநீக்கக் காப்புறுதி (Trip Interruption), மருத்துவக் காப்புறுதி (Medical Coverage), வெகுமதி புள்ளிகள் (Reward Points) அல்லது பிற நன்மைகள் தொடர்பாக STC எந்தவித உத்தரவாதத்தையும் வழங்க முடியாது. கிரெடிட் கார்டு வழங்கும் காப்புறுதி அல்லது பிற சலுகைகளைப் பயன்படுத்த விரும்பும் உறுப்பினர்கள், கட்டணம் செலுத்துவதற்கு முன் தங்களது கிரெடிட் கார்டு நிறுவனத்துடன் நேரடியாக தொடர்புகொண்டு தகுதி மற்றும் காப்புறுதி விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். கிரெடிட் கார்டு நிறுவனங்கள் வழங்கும் காப்புறுதி, வெகுமதி திட்டங்கள் அல்லது பிற சலுகைகள் தொடர்பான எந்தத் தீர்மானங்களுக்கும் STC பொறுப்பேற்காது..மேலதிக தகவல்களுக்கு அல்லது கட்டண முறைகள் தொடர்பான கேள்விகளுக்கு மன்ற அலுவலகத்தைத் தொடர்புகொள்ளவும்.








"If you would like to join this enjoyable and creative class, please contact the STC Office for registration details. New participants are welcome!"



**60 வயது வரை வாழ்ந்தார்...**ஆனால் அவர் வாழ்ந்த ஆண்டுகளை விட, அவர் உருவாக்கிய தாக்கமே இன்று பேசப்படுகிறது. ஒரு மனிதன் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார் என்பது வரலாற்றில் ஒரு எண் மட்டுமே. ஆனால்... அவர் எத்தனை பேரின் மனதில் நம்பிக்கையை விதைத்தார்? எத்தனை கனவுகளுக்கு சிறகுகள் கொடுத்தார்? எத்தனை தோல்விகளை வெற்றியாக மாற்றினார்? அதுதான் அவரது வாழ்க்கையின் உண்மையான மதிப்பு.

ஒரு முதியவரிடம் யாரோ கேட்டார்கள்: "உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பெருமையாக நினைப்பது என்ன?" அவர் சிரித்துக்கொண்டே பதிலளித்தார்: "நான் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தேன் என்பதல்ல...அந்த ஆண்டுகளில் எத்தனை பேரின் வாழ்க்கையில் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தினேன் என்பதுதான்." அந்த பதில் பல புத்தகங்கள் சொல்லாத ஒரு உண்மையை சொல்லியது.நேரம் நம்மை அளவிடுவதில்லை...நாம் நேரத்தை எப்படி பயன்படுத்தினோம் என்பதுதான் நம்மை அளவிடுகிறது.அதனால்தான் இந்த வரிகள் காலத்தை கடந்தும் உயிரோடு இருக்கின்றன: "ஆண்டுகள் கடப்பதால் நேரம் அளவிடப்படுவதில்லை; நாம் சாதிப்பதாலும் உணர்வதாலும் தான் அளவிடப்படுகிறது." ஒவ்வொரு நாளும் வெறும் காலண்டரில் ஒரு தேதியாக முடிந்து விடக்கூடாது. ஒரு புதிய அனுபவமாக...ஒரு சிறிய முன்னேற்றமாக...ஒரு மறக்க முடியாத நினைவாக...அல்லது யாரோ ஒருவரின் வாழ்க்கையில் ஒரு நேர்மறை மாற்றமாக மாற வேண்டும். வாழ்க்கை நீண்டதாக இருப்பது முக்கியமல்ல. அர்த்தமுள்ளதாக இருப்பதுதான் முக்கியம்.




**Alaska Cruise Adventure** – **Serenade of the Seas**: The Senior Tamils' Centre of Ontario proudly organized an unforgettable Alaska Cruise aboard Royal Caribbean's *Serenade of the Seas*, offering members the opportunity to experience one of the world's most breathtaking natural wonders. To experience the real Alaska is to witness nature at its grandest—where mountains rise higher, rivers flow mightier, and wildlife thrives in abundance. Alaska is a land of rugged beauty and untamed wilderness, where endless forests stretch beyond the horizon and long summer days seem never to end. Throughout the journey, participants were captivated by magnificent ice-blue glaciers, snow-capped mountain peaks, pristine waters, and the sight of majestic whales breaking the surface of the sea. The cruise provided not only relaxation and enjoyment but also a chance to appreciate the awe-inspiring beauty of nature. Members also enjoyed exciting shore excursions in Sitka, Juneau, Ketchikan, and Prince Rupert, each offering unique experiences, rich history, stunning scenery, and memorable encounters with local culture and wildlife.

ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்
**SENIOR TAMILS' CENTRE OF ONTARIO**
Registered Non- Profit Corporation # 923023
3852 Finch Ave. E, Unit 210, Scarborough ON M1T 3T9

Tel: 416-496-2897 /416-496-8850 Email: admin@seniortamilscentre.org

Website: www.seniortamilscentre.com

Acting President
Thavamalar Arulanantham
416-524-6031

Secretary
Thulasi Sahajananthan
647-834-4757

Treasurer
S. Pathmanathan
647-385-3180

Directors
S. Rajendra
647-828-2415

Víctor Santhiapillai
416-930-4096

Gunaratnam Nathan
647-688-4648

Ganga Thavaputhiran
647-965-5704

Vasanthini Balasundaram
647-459-6274

S. Sivapalan
647-988-2447

Editor/Director
Rathymathy Sabanathan
416-755-1853

Executive Director
Vasanthy Shanthakumar
647-238-0503




Appreciate what you have. Nobody knows when the last goodbye is. Life is fragile, and moments are fleeting. Embrace the present and cherish the people, experiences, and beauty around you.

Don't take anything or anyone for granted, because in an instant, it can all change. A final farewell might come unexpectedly, leaving you with regrets and what-ifs. So, hold your loved ones close, express your gratitude, and create memories that will warm your heart in the days to come.

Every moment is a gift, every smile a treasure, and every shared laugh a precious gem. Don't wait for tomorrow or next time; appreciate the beauty and love that surrounds you now.

In the end, it's not the material possessions or accomplishments that matter but the love, connection, and joy we share with others. So, cherish every moment, every hug, every conversation, and every second with those who bring light to your life. Remember, the last goodbye often comes unannounced, leaving us with memories and the hope that we showed appreciation and love when it mattered most. Embrace the present, cherish the beauty, and never let a moment pass without expressing your gratitude and love.